**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 17–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1,2வாதிகள் ஆஜர் இல்லை.1முதல் 6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி வழக்கறிஞர் ஆஜர் மற்றும் 1 முதல் 3 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. )

அ.வ.எண்.856/2022

பி.வா.சா.2 ராஜ்குமார் த/பெ தங்கவேல்

<u>வாதி தரப்பில்குறுக்குவிசாரணை :–</u>

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிக்க என்னுடைய வழக்கறிஞர் திரு.பாலசுப்பிரமணி அழைத்து வந்துள்ளேன். நான் ஈரோட்டில் உள்ள அம்மன்பைனான்ஸில் வேலை பார்த்து வருகிறேன். அந்த அம்மன் பைனான்ஸ் என்பது 1ம்பிரதிவாதி விஸ்வநாதன் உரிமையாளர் ஆவார் என்றால் சரிதான்.

2. வெற்றுபுரோநோட்டில் கையொப்பம் பெற்றுதான் கடன் கொடுப்போம் என்றால் சரிதான். வெற்றுபத்திரத்தில் கையொப்பம் பெற்று கடன் கொடுப்போம் என்றால் சரியல்ல. பதிவு செய்த ஆவணத்தின் படி கடன் கொடுப்போம். என்ன வகையான ஆவணங்கள் பதிவு செய்வீர்கள் என்றால் கிரையம் ஒப்பந்தம் போட்டு கடன் கொடுப்போம். அம்மன் பைனான்ஸில் நான் கடந்த 5 வருடங்களாக வேலை பார்த்துவருகிறேன்.

3. வாதிகள் எந்த வகையில் பழக்கம் என்றால் பணம் கொடுக்கும்போது நேரில் வந்தார்கள் அதனால் அவர்களை தெரியும். வாதிகள் மீன்கடை வைத்து தொழில் நடத்திவருகிறார்கள். 2021ம் வருடத்திலேயே நான் வேலைக்கு அம்மன் பைனாஸ்க்கு வந்துவிட்டேன். இந்த வாதிகளை வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படுத்திய பிறகு தான் தெரியும் அதற்க்கு முன்பு அவர்களை தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணமான பொதுஅதிகார ஆவணத்தை எழுதிகொடுத்தவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

4. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்களில் உள்ள சங்கதிகள், விவரங்கள் எனக்கு தெரியாது. தற்போது 2022ம் வருடம் தான் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களை பற்றி தெரிந்துகொண்டேன். 1ம்பிரதிவாதியிடம் இருந்து 2ம்பிரதிவாதி கிரையத்தின்போது ரொக்கமாக ரூ.50,000/-கிரைய தொகையாக பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். ரூ.20,000/-த்திற்க்கு மேல் சென்றால் வங்கி மூலமாகதான் பணபரிவர்த்தனை செய்யஇயலும் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு தெரியாது.

5. வா.சா.ஆ.6 ஆவணத்தில் யார் என்னை சாட்சி கையொப்பமிட அழைத்தார்கள் என்றால் 1ம்பிரதிவாதி விஸ்வநாதன். வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படுத்தும் தேதியில் சரவணன் என்பவர் சார்பதிவளார் அலுவலகத்திற்க்கு வந்திருந்தார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் நான் கவனிக்கவில்லை. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 5ல் ஒரு ரசீது எழுதிக்கொடுத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது என்ன ரசீது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் ரொக்கம் ரூ.50,000/-ம் கொடுத்ததற்கான ரசீது அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது.

6. தற்போது என்னிடம் காட்டப்படும் என்னுடைய பிரமாணவாக்குமூலம் வழக்கறிஞர் முன்பே தட்டச்சு செய்து வைத்திருந்தார் என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன். நான் சொல்லி வாசகங்கள் பிரமாணவாக்குமூலத்தில் தயார் செய்யப்பட்டதா என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் விஸ்வநாதன் வாங்கி வைத்திருந்தார் என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை விஸ்வநாதன் தான் கொண்டுவந்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் சரவணன் தான் தட்டச்சு செய்து கொண்டுவந்திருந்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் தலைப்பு பாகத்தில் தேதிகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதிகளும் தேதி குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பங்கள் இடவில்லை என்றால் சரிதான். நானும் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் சாட்சிகளாக தேதி குறிப்பிடாமல் கையொப்பமிட்டோம் என்றால் சரிதான்.

8. 2ம் சாட்சி செந்தில்குமார் எங்கள் அம்மன் பைனான்ஸில் வேலை பார்ப்பவர் என்றால் சரியல்ல. 2ம் சாட்சியை சரவணன் தான் அழைத்துவந்தார். வாதிகளை நான் ஒரு முறை பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தல் ரசீது என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அதற்குரிய ரிவன்யுஸ்டாம் ஒட்டி கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் நோட்டரி கையெழுத்து பெறப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ6 ஆவணம் எதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் ஏற்கனவே உள்ள கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. ஏற்கனவே எழுதப்பட்ட கிரைய ஒப்பந்த விவரங்களை எல்லாம் சொல்லிதான் என்னை சாட்சியாக அழைத்தார்கள் என்றால் சரிதான். இந்த ஆவணம் தவறு என்று நிரூபிக்கப்பட்டால் குற்றவியல் நடவடிக்கை என் மீது எடுக்கலாம் என்றால் எடுக்கலாம்.

மறுவிசாரணை:−இல்லை.